# கருணாநிதி, சிற்றரசு யாழ்ப்பாணம் வருவர்

Registered as a Newspaper in Ceylon — நம் 10

# ஈழநாடு

EELA NADU — மலர் 9

National Tamil Daily — இதழ் 176 — தேசிய தினசரி

... ஆடி 21 ரபி ஆகி. 28 ஞாயிற்றுக் கிழமை [6-8-67]

## காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொள்வர்?

யாழ்ப்பாணம், ஞாயிறு இம்மாதம் 22-ம், 26-ம், 27-ம் திகதிகளில் பருத்தித்துறையில் நடைபெறவிருக்கும் தமிழ்க் காங்கிரசின் 22-வது வருடாந்த மகாநாட்டில் கலந்துகொள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த எம். பி. க்களோ, அமைச்சர்களோ அழைக்கப்படமாட்டார்களென காங்ரஸ்கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். அண்மையில் நடந்த கட்சியின் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சில முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளலாமெனத் தெரிகிறது. இலங்கையில் தற்பொழுது தங்கியிருக்கும் திரு. சிற்றரசுவும் விரைவில் இலங்கைவரவிருக்கும் கலைஞர் கருணாநிதியும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளலாம் எனச் சொல்லப்படுகின்றன. இதுபற்றிய இறுதி முடிவுகள் ஆமமாதம் 12-ம் திகதி நடைபெறவிருககு

[6ம் பக்கம் பார்க்க] ம்

# ஜாகர்த்தாவில் மாணவர்மீது சீனத் தூதரகத்தினர் சுட்டனர்

## மூவர்படுகாயம்; கொந்தளிப்பு நிலையை சமாளிக்க முயற்சி

ஜாகர்த்தா, ஆக. 5

இந்தோனேஷியத் தலைநகரான ஜாகர்த்தாவிலுள்ள சீனத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய இந்தோனேஷிய மாணவர் கோஷ்டி மீது சீனத் தூதரகத்தைச் சேர்ந்த சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு போர்வீரரும் மூன்று மாணவர்களும் பலத்த காயமடைந்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஜாகர்த்தாவில் பெரும் கொந்தளிப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தோனேஷிய ராணுவ அணியும் டாங்கிகளும் சீனத்தூதரகத்தைச் சூழ்ந்து கலகம் ஏற்படாமல் தடுக்குமுகமாகநிற்கின்றன.

முன்னூறு மாணவர்களைக் கொண்ட ஒரு கோஷ்டி சீனத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்செய்தது. ஆர்ப்பாட்டக் காரர்கள் சீனத் தூதரகக் கட்டிடத்தின்ஒரு பகுதியில் தீவைத்தும் சேதமிழைத்தனர். இச்சமயத்தில்தூதரகத்தினுள்ளிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

## கல்லூரி அதிபர்களுடன் ஆலோசிப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு கல்லூரி மாணவர்கள் நடந்துகொள்ளவேண்டியமுறைகள், அவர்கள் பொதும ஞடன் எவ்வாறு ஒத்துழைக்கவேண்டும் என்பன பற்றி கல்லூரி அதிபர்களுடன் ஒருமகாநாடு கூட்டிவட பகுதி பொலிஸ்சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆலோசிக்கவிருக்கிறார்.

வடபகுதியிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபற்றிய மகாநாடுகளைக் கூடிட்இவர்இதுபற்றிஆலோசனைகள் நடத்தவிருக்கிறார். முதலாவதாக யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்த கல்லூரிகளின் அதிபர்களுடனான மகாநாடு இம்மாதமத்தியில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

இம்மகாநாட்டுக்கு இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வரவித்தியாலயம்கனகரத்தினம்மத்தி மகாவித்தியாலயம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி, சென், ஜோன்ஸ்கல்லூரி, செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகியனவற்றின் அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

[ந நி.]

## காங்கிரஸ் வாலிப முன்னணி ராஜிநாமா?

யாழ்ப்பாணம், சனி கடந்த 29-ந் திகதி பருத்தித்துறையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 22-வது மகாநாட்டு ஏற்பாடுகள் பற்றிய கூட்டத்தில் நடைபெற்ற சில பிரச்னை சம்பந்தமாக ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக பருத்தித்துறை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி அங்கத்தவர்கள் அவசரக் கூட்டமொன்றைக்கூடி தங்கள் ராஜிநாமாவை மேலிடத்திற்குச் சமர்ப்பித்துள்ளனராம். தங்கள் ராஜிநாமாச் சம்பந்தமான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கும், காங்கிரஸ் செயலாளருக்கும், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்திற்கும் பருத்தித்துறை தொகுதியைச் சேர்ந்த மத்திய கமிட்டி உறுப்பினரான திரு. என. நடராசாவுக்கும் கடிதமூலம் அவர்கள் அறிவித்துள்ளனர் எனத்தெரியவருகிறது.

[வ. நி.]

## மூதூர்

## கிராமப்பாடசாலைகளில் ஆசிரியைகள் இல்லை

மூதூர், சனி கொட்டியாபுரப்பற்றில் உள்ள அநேகமான கிராமப் புறங்களைச்சேர்ந்த சிரேஷ்ட கலவன்பாடசாலைகளில் ஆசிரியைகள் இல்லை. ஆனல் பட்டினத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியைகள் குவிந்து கிடக்கிறார்கள்.

மூதூர் பகுதியில் கிராமப் பாடசாலைகள் பல சிரேஷ்ட கலவன் பாடசாலைகளாகத் திகழ்ந்து ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கும் மாணவ மாணவிகளை அனுப்பி வைக்கின்றன. சில பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளின் தொகைக்கு ஒப்ப பெண்பிள்ளைகளும் தொகைஇருந்துவருகின்றது சிலபாடசாலைகளில் ஆண் பிள்ளைகளைக் காட்டிலும் பெண் பிள்ளைகளே கூடுதலாகவும் உள்ளார்கள். இந்நிலையில் இத்தகைய பாடசாலைகளில் ஆசிரியைகள் கிடையாது. சம்பூர்மகாவித்தியாலயம், சேனையூர் அரசினர் பாடசாலையில் இரண்டிலும் ஒவ்வோர் ஆசிரியை தான் இருக்கிறார்கள். இதைவிட கிளிவெட்டி அரசினர் பாடசாலை, மல்லிகைத்தீவு அரசினர் பாடசாலை, கூனித்தீவு அரசினர் பாடசாலை உட்பட்ட இன்னும் அநேகமான பாடசாலைகளில் ஒருவர் தானும் இல்லாத குறைபாடு பலவருடங்களாக நீடித்து வருகிறது. இதை யிட்டு மாவட்ட வித்தியாகந்தோருக்குப் பலமுறை தெரியப்படுத்தியும் காரியம் ஆகவில்லை. வளர்ந்த பெண் பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளில் பெண்பிள்ளைகள் நலன்களைக் கவனிக்க ஆசிரியைகள் இல்லாதிருப்பதனல் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

## வியட்நாமுக்கு மேலும் 50,000 அமெரிக்க துருப்புகள்

வாஷிங்டன், ஆக 4 ராணுவ சூனியப்பிரதேசத்தில் வடவியட்நாம்படைகளை எதிர்த்துப் போராடுவதற்கு 50,000 அமெரிக்கத் துருப்புகளை அனுப்புவதற்கு திரு.ஜோன்சன் சம்மதித்துள்ளார்.

வியட்நாமிலுள்ள தளபதியின் கோரிக்கைக்கிணங்க இந்தத் துருப்புகள் அனுப்பப்படவிருக்கின்றனர். ஒரு லட்சம் துருப்புகளை அனுப்புப்படிதளபதி ஜோன்சனைக் கோரியிருந்தார். தற்போது 50,000 துருப்புகளை மட்டுமே அனுப்பமுடியுமென்று ஜோன்சன் அறிவித்துள்ளார்.

## "உயர்கல்வி மாணவருக்கு வசதிகள் போதா"

— டாக்டர் மலலசேகரா

கொழும்பு, சனி உலகப் பல்கலைக் கழகச் சேவைப்பகுதியின் மூன்றுவது தேசிய சபைக் கூட்டம் இன்று காலை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து பேசிய, இலங்கை உயர் கல்வித்தேசிய சபையின் தலைவரான டாக்டர் ஜீ. பி. மலலசேகரா, இந்நாட்களில் உயர்கல்விக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதென்றும், ஆனல் அதே நேரத்தில், அவர்களுக்குத் தேவையான வசதிகள் அளிக்க முடியாமலிருக்கிறதென்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இந்த வசதிகளை மாணவர்களுக்கு அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், உலகப் பல்கலைக் கழகச் சேவைப் பகுதி போன்ற தொண்டர் ஸ்தாபனங்களும் உதவிசெய்ய முன்வர வேண்டுமென்றும் கூறினார்.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு




டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உலகத்தின் இரகசியங்களை மூடிவைத்திருக்கும் கதவுகளைத் திறந்துவிடக்கூடிய சக்தியைப் பெற்றால், உலகம் அதன் இரகசியங்களை நமக்கு தரத் தயாராக உள்ளது. அக்கதவுகளைப் திறக்கக்கூடிய வலிமையை மாத்திரம் நாம் பெற வேண்டும். இவ் வலிமையை நமக்குத் தரக் கூடியது இறையருள் ஒன்றேதான்.

— சுவாமி விவேகனந்தர்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389

சுர்ஜப்பானம் பிலவங்கவருடம் ஆடி மீ 21 உ (6-8-67)


## காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன [இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷன்] தலைவர் பதவியை, மந்திரி கேட்டுக்கொண்டதற்கிணங்க, ராஜினுமாச் செய்திருக்கும் ஜனுப் எம் ரபீக், மந்திரி கேட்டுக்கொள்ளாத, மந்திரி சற்றும் எதிர்பார்த்திராத சில நல்ல தகவல்களை வெளியிட்டிருக்கிறுர். பொதுமக்களுக்கு ஆச்சரியத்தையும், எதிர்க்கட்சியினருக்கு நல்ல வாய்ப்பையும் அரசாங்கத்துக்கு பெரும் திகைப்பையும் ஏற்படுத்தியிருக்கும் ஜனுப் ரபீக் வெளியிட்டுள்ள தகவல்கள் வேறு விதமாகச் சொன்னுல் அவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆராயப்படவேண்டியவை; அது மட்டுமல்ல வர்த்தக மந்திரியை விளக்கத்தை எதிர்பார்க்க வேண்டியவையும் கூட.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அதன் தலைவராகப் பணியாற்றி வந்திருப்பவர் ஜனுப் ரபீக். இன்றைய தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரும் அவருடைய பதவிக்காலம் நீடிக்கப்பட்டது அவரது உழைப்பையும் திறமையையும் பார்த்துத்தான் பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே திடீரென்று அவரை ராஜினுமாச்செய்யும்படி வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் கேட்டுக்கொண்டதன் காரணமென்ன? அவரது ராஜினுமா உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட முன்னரே புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டு பதவியும் ஏற்கவிருக்கிறுர்.

பதவியை ராஜினுமாச் செய்துள்ள ஜனுப் ரபீக், காப்புறுதிக் கூட்டுத்தாபன நியமனங்களில் அரசியல் தலையீடு இருப்பதால் நிர்வாகத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அதாவது காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கே உறுதியற்றநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறுர். நியமனங்கள் எடுத்துக் கொடுப்பதன் மூலம் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை உபயோகிக்கக்கூடாது என்றும் நியமனங்களில் மந்திரி தலையிட்டதால் நியமனங்கள் செய்வதில் தாமதமும் தகுதியில்லாதவர்களை நியமிக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதென்றும் ஜனுப் ரபீக் தெரிவித்திருக்கிறுர்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் மட்டுமல்ல வேறு எந்த இலாகாவிலும் ஸ்தாபனத்திலும் நியமனங்களில் தகுதிக்கும் திறமைக்குமே மதிப்பளிக்கப்படவேண்டும். நியமனங்களில் தொகுதி நலனே, கட்சிநலனே கருதி அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட்டால் நிர்வாகம் சிராகவும், திறமையாகவும் நடைபெறமுடியாது.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தில் அரசியல் 'நியமனங்கள்' நடைபெற்றதாக சென்ற பொதுத்தேர்தலில் இன்றைய ஆளும் கட்சியினர் முன்னைய ஆட்சியாளரை கண்மையாகக் கண்டித்தது மட்டுமல்லாது ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக கூ. மொ. வி. பற்றி விசாரணைக் கமிஷன் ஒன்றையும் நியமித்தனர். கூ. மொ. வி. பற்றி எந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டனவோ அதே குற்றச்சாட்டுக்களை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்மீது. அதற்குப் பொறுப்பான அமைச்சர் மீது அதன் தலைவரே சுமத்தியிருக்கிறுர் இதற்கு அமைச்சர் பதிலளித்தால் மட்டும் போதாது. இக்குற்றச்சாட்டுப் பற்றி விசாரணைசெய்து இதர இலாகாக்களிலும் ஸ்தாபனங்களிலும் இனியாவது அரசியல் தலையீடு இல்லாமல்தடுத்து சிரான, திறமையான, நேர்மையான, நிர்வாகம் பெற வழிகாணவேண்டியது அவசியம்.

# எம். ஜி. ஆரின் கோரிக்கையை நீதியரசர் நிராகரித்தார்

# "படங்களில் கதாநாயகனுகவே நடிப்பேன் இதை வேறுயாரும் தடுக்கமுடியாது"

## எம். ஜி. ஆர் — ராதாவழக்கு விசாரணைவிபரம்

சென்னை, ஆக. 5

காமராஜரின் பிறந்த தினக் கொண்டாட்டத்தையொட்டி நடந்த பொதுக் கூட்டத்தில் தாம் பேசிய பேச்சின் ஒலிப்பதிவை நீதிமன்றத்தில் 'ஒலிபரப்பி' காட்டுவதற்கு அனுமதியளிக்கவேண்டுமென நடிகர் எம். ஜி. ஆர். விடுத்த கோரிக்கையை நீதியரசர் 'அனுமதிக்கமுடியாது' எனக் கூறி நிராகரித்தார்.

திரைப்பட நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைச் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்ததாகவும் தம்மைத்தாமே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்ய முயன்றதாகவும் திரைப்பட நடிகர் எம். ஆர். ராதா மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கு சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி. லக்ஷ்மணன் முன்னிலையில் நேற்றுத்தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது.

நேற்றும் தொடர்ந்து சாட்சியமளித்த நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் விசாரணையின் ஒரு கட்டத்தில், காமராஜர் பிறந்த தினக்கொண்டாட்டத்தையொட்டி நடந்த பொதுக் கூட்டத்தில் தாம் பேசிய பேச்சு ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளதென்றும் அதை நீதிமன்றத்தில் போட்டு ஒலிபரப்ப அனுமதியளிக்க வேண்டுமென்றும் நீதிபதியிடம் அனுமதிகோரினர்.

இந்த நீதிமன்றத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட எதுவும் இதற்குமுன் ஒலிபரப்ப அனுமதிக்கப்பட்டதில்லையென்றும் எனவே இக்கோரிக்கையை ஏற்க முடியாதெனறும் தெரிவித்து நீதியரசர் கோரிக்கையை நிராகரித்தார்.

காமராஜரின் பிறந்த தினக்கொண்டாட்டக் கூட்டத்தில் தாம் திரு. காமராஜரை "என் தலைவர்" என்று குறிப்பிட்டதாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி சரியல்லவென்றும் "ஒருநல்ல தலைவர்" என்றே தாம குறிப்பிட்டதாகவும் தமது இந்தப் பேச்சு ஒலிப்பதிவு செய்யப்பட்டு தம்மிடம் இருப்பதாகவும் எம். ஜி. ஆர். தெரிவித்தார்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. வானமாமலை நேற்றும் தொடர்ந்து எம். ஜி. ஆரைக் குறுக்கு விசாரணை செய்தார். காமராஜர்பிறந்த தினக்கொண்டாட்டக் கூட்டத்தில் எம். ஜி. ஆர். கலந்துகொண்டு காமராஜரின் உருவப்படத்துக்கு மாலை சூட்டிய புகைப்படம் வெளிவந்த பத்திரிகைவெட்டுத் துண்டுகள் அக்கூட்டச் செய்திகள் வெளிவந்த பத்திரிகை வெட்டுத்துண்டுகள் எம் ஜி ஆரிடம் காண்பிக்கப்பட்டன புகைப்படங்கள் எல்லாம் சரியானவைதான் எனக்கூறிய எம். ஜி. ஆர். தாம் காமராஜரை "என் தலைவர்" என்று குறிப்பிட்டதாகப் பிரசுரித்தது சரியல்லவென்றும் "ஒருநல்ல தலைவர்" என்றே தாம் குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

வழக்கறிஞரின் கேள்விகளுக்கு எம். ஜி. ஆர். பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:-

1966-ம் ஆண்டில் காமராஜரின் பிறந்ததினத்தில் அவரை நான் பாராட்டியதாக எனக்கு நினைவில்லை. தனிப்பட்ட முறையில் காமராஜரை நன் ஒருபோதும் கூடாதமுறையில் பேசியதில்லை காமராஜர் ஓர் அரசியல் கட்சியின் பிரபல தலைவர் என்று நான் கருதுகிறேன. டில்லியில் காமராஜர் வீட்டில் நடந்த தாக்குதல் தவறானது என்று நான் அபிப்பிராயம் வெளியிட்டது மட்டுமல்லாமல் எனது 'சமநீதி' என்ற வாராந்த சஞ்சிகை மூலம் டில்லிச் சம்பவத்தைக் கண்டித்துமிருந்தேன்.

டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம் எனது குடும்ப வைத்தியரும் குடும்ப நண்பருமாவார். சம்பவம் நடந்த அன்று ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் அவர் என்னை வந்துபார்த்தார். அங்கு நீண்டநேரம் இருந்து எனது உடல் நிலையைக் கவனித்து வந்தார். மனித இரத்தத்தில் பல பிரிவுகளுண்டு என்பது டாக்டர் சுப்பிரமணியம் ஆஸ்பத்திரியில் என்னிடம் கூறிய பின்னர் தான் எனக்குத் தெரியும்.

**ராதாவின் இரத்தமல்ல**

துப்பாக்கிச் சம்பவத்தின்பின் எனது உள்ளாடையில் ராதாவின் இரத்தம் [illegible] படிந்தது என்பதை நான் மறுக்கிறேன். "நான் ராதாவைச் சுடவில்லை; அதனுல் அவரது உடலிலிருந்து இரத்தம் என் உடையில் பீறிட்டுப்பாயவில்லை.

எனது மேல் அங்கி ரசாயனப் பரிசோதருக்கு அனுப்பப்படும் என்று டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்தார். இரத்தக்கறை படிந்த ஷேர்டை விட்டு 'டோபி' கழுவிவிட்டதாகவும் டாக்டர் சொன்னுர். இரத்தக்கறையை நீக்குவதற்காக டாக்டர் சுப்பிரமணியத்தின் கோரிக்கை மீதே ஷேர்ட் கழுவப்பட்டதென்பதை நான் மறுக்கிறேன்."

"ஷேர்ட் கழுவப்பட்டதென்பதை முதலில்மறுத்து பின்னர் வழக்கறிஞரிடம் இதற்கு ஆதாரமிருப்பதைத் தெரிந்துகொண்டதால்தான் ஷேர்ட் கழுவப்பட்டதென்பதை பின்னர் ஒப்புக்கொண்டீர்கள்" என்று வழக்கறிஞர் கூறியதையும் சாட்சி எம். ஜி. ஆர். மறுத்தார்.

வழக்கறிஞர்.- ராதாவின் இரத்தம் உமது ஷேர்ட்டில் படிந்திருந்ததால் அதை அகற்றுவதற்காகவே உமது டோபி அதைக் கழுவியிருக்கிறுர் என்று நான் கூறுகிறேன்.

எம். ஜி. ஆர். நான் அதை மறுக்கிறேன்.

**குமுதத்தில் வந்த கட்டுரை**

'குமுதம்' என்னும் வாராந்த சஞ்சிகையின் ஒரு பிரதியை சாட்சி எம். ஜி. ராமச்சந்திரனிடம் வழக்கறிஞர் காண்பித்து அதில் டாக்டர் சுப்பிரமணியம் எழுதியதாக வெளிவந்திருந்த ஒரு கட்டுரையை சாட்சியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார், டாக்டரின் புகைப்படத்தை சாட்சி அடையாளம் காட்டினுர். ஆனுல் டாக்டர்தான் அந்தக் கட்டுரையை எழுதினுரா என்பது எனக்குத் தெரியாது" என்று எம். ஜி. ஆர். கூறினுர்.

வழ: கட்டுரை டாக்டர் சுப்பிரமணியத்தின் பெயரில் வெளிவந்திருக்கிறது.

எம். ஜி ஆர்: தாமும் இரண்டு டாக்டர்களும் சம்பாஷித்துக் கொண்டிருந்ததை 'குமுதம்' நிருபர் ஒருவர் ஒற்றுக் கேட்டு தமது [டாக்டர்] பெயரில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருப்பதாகவும் தாம் அதை மறுக்கப் போவதாகவும் டாக்டர் சுப்பிரமணியம் ஆஸ்பத்திரியில் தெரிவித்தார். ஆனுல் தாம் அதை மறுத்தாரா என்பதுபற்றி இன்னும் அவர் என்னிடம் சொல்லவில்லை.

எனது வளர்ப்பு மகன் அப்பு குமுதத்தில் வந்த கட்டுரையை வாசித்திருக்கிறுர். எனது மனைவி ஜானகியும் வாசித்திருக்கக்கூடும்.

பெப்ரவரி 16-ந் திகதிய குமுதத்தில் வெளிவந்த கட்டுரையில் சூட்டுச் சம்பவம்பற்றி டாக்டர் சுப்பிரமணியம் அறிந்து கொண்டதும் அவர் ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்றதுபற்றியும் அவர் மயிரிழையில் உயிர் தப்பினுர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. டாக்டர் சுப்பிரமணியம் ஆஸ்பத்திரிக்குச் சென்றதும் அவரைக் கட்டியணைத்துக் கொண்ட எம். ஜி. ஆர். "ஏன் பதறுகிறீர்கள். எனக்கு ஒன்றுமில்லை. நான் நன்ருகவே இருக்கிறேன்." என்று எம். ஜி. ஆர். கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கட்டுரைபற்றித் தாம் மறுப்புத் தெரிவிக்கவோ அதைச் சரியென ஏற்றுக்கொள்ளவோ விரும்பவில்லை என்று சாட்சி ராமச்சந்திரன் வழக்கறிஞரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

வழ: நான் குமுதத்தை நம்புகிறேன் நீங்கள் அந்த நேரம் நன்ருக இருந்தீர்கள். உங்களுக்கு வலி ஏதும் இருக்கவில்லை என்று கூறுகிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

எம். ஜி ஆர்.: இல்லை. எனக்கு வலி இருந்தது. ஆனுல் அதை நான் வெளிக்காட்டவில்லை. அதுதான் டாக்டரின் அக்கருத்தாக இருக்கலாம்.

எனது அண்ணன் சக்ரபாணி ஆஸ்பத்திரிக்கு வந்தார். ஆனுல் அச்சமயம் டாக்டர் சுப்பிரமணியம் அங்கிருந்தாரா என்பது நினைவில்லை.

வழக்கறிஞரின் கேள்விகளுக்கு மேலும் பதிலளிக்கையில சாட்சி எம். ஜி. ஆர். குறிப்பிட்டதாவது:

ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் நான் இருந்த போது என்னைக் கடந்து எதிரி ராதா கொண்டு செல்லப்பட்டதை நான் பார்த்தேன். ஆனுல் அவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது தெரியாது. ராதாவின் நிலைபற்றியோ வாசு

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

6-8-67

ஞாயிற்றுக்கிழமை

[ஆடிமாதம்21-ந்திகதி]

நட்சத்திரம் - ஆயிலியம்.

திதி - அமாவாசை பகல் 9-13 வரை மேல் பிரதமை.

சுபநேரம் 9-04-10-34

ராகுகாலம் 4-34-6-04

மேடம்- பெற்றேர் பெருமதிப்பு

ரிஷபம்- நடப்பவை நலன்தரும்

மிதுனம்-செய்தொழில் நஷ்டம்

கடகம் - உள்ளத்தில் உறுதி

சிங்கம் - சுவைபட மொழிதல்

கன்னி - நிலைமையில் இறக்கம்

துலாம்- பெண்வழிப் பெருமை

விருச்சிகம் - இலட்சிய வெற்றி

தனுசு - அபாய அறிவிபபு

மகரம்- அனுகூலம்

கும்பம்- உற்ருர் கவலை

மீனம்- குருபக்தி

—சோதிடக்கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே நீளமான நாகார்ஜுனசாகார் அணை

## சோவியத்உஸ்பெகிஸ்தானில் இந்திய கலாச்சார விழா

தாஷ்கெண்ட், ஆக. 5 சோவியத் யூனியனிலுள்ள ஒரு குடியரசான உஸ்பெகிஸ்தானின் தலைநகரான தாஷ்கெண்டில், இம்மாதம் 12-ந் திகதி தொடக்கம் இந்திய கலாச்சார விழாவொன்று ஆரம்பமாகும். பத்து நாட்களுக்கு இது தொடர்ந்து நடைபெறும். இந்திய திரைப்பட விழாவும் இதில் இடம் பெறும்.

''இந்திய கலாச்சாரவிழா, தாஷ்கெண்ட் சரித்திரத்தில் ஒரு குறிப்பிடக்கூடிய சம்பவமாக விளங்கும்'' என்று தாஷ்கெண்ட், விழாவையொட்டி விடுத்துள்ள செய்தியில் தாஷ்கெண்ட் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## அரபு நாடுகள் உச்சி மாநாடு மாதக் கடைசியில் நடைபெறலாம்

கார்டூம், ஆக. 5 கார்டூமில் கடந்த 5 தினங்களாக மாநாடு நடத்திய அரபு நாட்டு வெளியுறவு மந்திரிகள், அரபு நாடுகளுக்கிடையே ஓர் உச்சி மாநாடு நடக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இந்த அரபு உச்சிமாநாடு நடைபெறும் இடம் எதுவென இன்னும் குறிப்பிடவில்லை. ஆனாலும், இம்மாநாடு இம்மாதம் கடைசிப் பகுதியில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மத்தியப் பிரதேச மந்திரிகள் குறைந்தசம்பளம் பெறுவர்

போபால் ஆக. 5 மத்திய பிரதேச மந்திரி சபையைச் சேர்ந்த மந்திரிகள், தமது சம்பளத்தைத் தாமகவே குறைக்க முன்வந்துள்ளனர்.

மந்திரிகள்தமது மாதாந்த சம்பளத்தில் 100 ரூபாவும், ராஜ்ய மந்திரிகள் 80 ரூபாவும், உதவி மந்திரிகள் 50 ரூபாவும் குறைக்க முன்வந்துள்ளனர்.

அத்துடன் மந்திரிகள் தமது சொத்து, கடன் மற்றும் விபரங்கள் யாவற்றையும் வெளியிடவேண்டும்.

குவாலியார் ராணி ராஜ்மாதாவின் தலைமையில் ஓர் இணைப்புக்கமிட்டி, புதிய மந்திரி சபையில் நியமிக்கப்பட்டுள்ளது.

## நக்ஸல்பாரியில் நிலைமை சீரடைந்து வருகிறது

கல்கத்தா, ஆக. 5 நக்ஸல்பாரியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கப்போதுமான அளவு பொலிஸ் படை அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மேற்கு வங்காள பிரதமர் திரு. அஜோய் முகர்ஜி இங்கு அறிவித்தார். நக்ஸல்பாரியில் பொலிசார் மேற்கொண்ட தடை நடவடிக்கைகளின் பயனாக, இப்போது அங்குஅமைதிநிலவுகிறது.

### குடும்பங்கள் திருமபின

அப்பகுதிகளிலிருந்து, தீவிரவாதிகளுக்கு அஞ்சி வெளியேறிய குடும்பங்களில் 15 குடும்பங்களைத் தவிர ஏனைய குடும்பங்கள் அனைத்தும் அங்குதிரும்பிவந்துவிட்டன.

சில நிபந்தனைகளின் கீழ், தீவிரவாதத் தலைவர்கள் சிலர் பொலிசாரிடம் சரணடைய முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

### கேரள கல்லூரிகள் மீண்டும் திறந்தன

திருவனந்தபுரம், ஆக. 5 கேரள ராஜ்யத்தில் உணவுப்பற்றுக்குறை காரணமாக கடந்த மாதம் 24-ந் திகதியிலிருந்து மூடப்பட்டிருந்த கல்லூரிகள் யாவும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

### முதல் மந்திரி வேண்டுகோள்

ராஜ்யத்தில் நிலவும் உணவுப் பற்றுக்குறையைத் தீர்க்கும் நடவடிக்கைகளில் சகல மக்களையும் ஒத்துழைக்குமாறு கேரள முதல் மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 'நாட்டின் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு' இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்

### அணைக்கட்டு வேலைகளில் இறந்தவர்களுக்கு ஆந்திர முதல் மந்திரி அஞ்சலி

ஹைதராபாத், ஆகஸ்ட் 5

இந்தியாவின் மிகப்பெரிய நிர்ப்பாசன அணையும், உலகத்திலேயே மிகப்பெரிய அணைகளில் ஒன்றுமான நாகார்ஜுன சாகார் அணைத்திட்டத்தின் இடது, வலது கால்வாய்கள் நேற்று திறந்துவிடப்பட்டன. இத்திறப்பு வைபவத்தை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நடாத்தினர்.

உலகிலேயே மிக நீளமான நாகார்ஜுன அணைக்கு, காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அணையின் இடதுபக்கக் கால்வாய் மறைந்த பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் நாமத்தைக் கொண்டுள்ளது.



பிரதமர் இந்திரா காந்தி, லால்பகதூர் சாஸ்திரியின் உருவப்படமொன்றையும் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த அணையின் மூலம் 25 லட்சம் ஏக்கருக்கு நீர் கிடைக்கும்.

### நாட்டுக்கு சொந்தமானது

அணையைத் திறந்து வைத்துப் பேசுகையில், 'இந்த அணை ஆந்திரப் பிரதேசத்தில் இருந்தபோதும், இது இந்த நாடுமுழுவதற்கும் சொந்தமானது. நாட்டின் ஒற்றுமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது' என்றார் பிரதமர் இந்திரா காந்தி.

ராஜ்யங்களுக்கிடையே நிலவும் வேற்றுமைகள் பற்றிக்குறிப்பிடுகையில், அவை சுமுகமாகத் தீர்க்கப்படுமெனத் தாம் நம்புவதாகப் பிரதமர் கூறினர். பிராந்திய உணர்ச்சிக்கெதிராக நாடு தன்னைப்பாதுகாத்துக் கொள்ள எல்லா முயற்சிகளும் எடுக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினர்.

### இறந்தவர்களுக்கு அஞ்சலி

வைபவத்தில் கலந்து கொண்ட ஆந்திரப் பிரதேச முதல் மந்திரி திரு. பிரம்மானந்த ரெட்டி, டிசம்பர் 1955-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த அணைத்திட்டத்தில் உயிரிழந்தவர்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தினர்.

## 'லியூ-ஷா-ஷி வாசஸ்தல முற்றுகையை கைவிடவும்'

### செங்காவலருக்கு சீன கம். கட்சி வேண்டுகோள்

பிகிங். ஆகஸ்ட் 5 சீன ஜனாதிபதி லியூஷாஷியின்வாசஸ்தலத்தை முற்றுகையிட்டு, அவரை அங்கிருந்துவெளியேறுமாறு ஆர்ப்பாட்டம் செய்யும் செங்காவலரை, அங்கிருந்து சென்றுவிடுமாறும், முற்றுகையைக் கைவிடுமாறும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சீனத்தலைவர்கள் வாழும் பகுதியில் பிரவேசித்தது ஒரு பாரதூரமான குற்றமாகுமென்றும், அப்பகுதியிலிருந்து செங்காவலர்வெளியேற வேண்டுமென்றும் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

### மா ஆதரவாளர் தாக்கப்பட்டனர்

ஒரு மாகாணத்தில், 30 மா-சே-துங் ஆதரவாளர்கள் ஆத்திரமடைந்த தொழிலாளிகளால் தாக்கப்பட்டு, கடத்திச்செல்லப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஹூஹான் மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற கலவரங்களின்போது, ராணுவத்தினர் சிலர் காயமடைந்ததைச் சீன நேற்று உத்தியோகபூர்வமாக ஒத்துக்கொண்டுள்ளது. ஹூஹானில் நிலைமை இன்னும் நெருக்கடியாகவே உள்ளது.

### பலாத்காரம்

சீனவின் வேறு சில மாகாணங்களிலும், பலாத்காரமும், குழப்பமும் நிகழ்ந்து வருவதாகத் தெரிகிறது. இவற்றை அடக்க ராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

### களையெடுப்பு

இதற்கிடையில், சீன ராணுவத்திலுள்ள தளபதிகளில் பலர் களைபிடுங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## படித்த பெண்கள் இன்று மீசாலையில் குடியேறுவர்

### காலை 10-15மணிக்குஅரசாங்க அதிபர் ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு மீசாலை படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்த 50 இளம் பெண்களும் இன்று காலை அங்கு குடியேற்றப்படுவார்கள். இதனை வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா இன்று காலை 10-15 மணிக்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைப்பார். இதனை முன்னிட்டு அங்கு ஓர் பொதுக் கூட்டமும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 10 மணிக்கு அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் மற்றும் பிரமுகர்களும் "மேளவாத்தியங்களுடன் இக்குடியேற்றத்திட்டத்துக்கு மீசாலைச்சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு குடியேற்றத் திட்டம் திறந்து வைக்கப்பட்டபின்னர் நடைபெறும் பகிரங்கக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. ஜெயஸீலன், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், காரியாதிகாரி திரு. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

இலங்கையிலேயே முதன் முதலாக நடைபெறும் படித்தபெண்கள் குடியேற்றத் திட்டம் இதுவேயாகும்.

[ந. நி.]

### இந்தியாவுக்கு உணவு அனுப்புவதில் தாமதம்

வாஷிங்டன், ஆக. 5 இந்தியாவுக்கு அமெரிக்கா அனுப்பும் உணவு தான்யங்களில் தாமதம் ஏற்படும் என்ற செய்தியை அமெரிக்க விவசாய காரியதரிசி திரு. பிரீமன் மறுத்துள்ளார். இந்தியாவுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள உணவு தான்யம், குறிப்பிட்ட காலத்துக்கு அனுப்பிவைக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

### எம். பி. உறுதி

சுழிபுரம், சனி பண்ணாகம் உப தபால் கந்தோர் மெயில் கட்டும் நேரத்தை மூன்று மணியாகத் தபால் பகுதியினர் குறைத்ததால் பொது மக்கள் கஷ்டமடைவதாகவும், மெயில் கட்டும் நேரத்தை நாலு மணிவரையும் நீடிக்கவேண்டும் எனவும், மற்றும் தொலைபேசி வசதி சம்பந்தமாகவும் பண்ணாகம் மக்கள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தை நேரில் சந்தித்துக் கேட்டதற்கு திரு. அமிர்தலிங்கம் இவைபற்றிக் கவனிப்பதாக உறுதியளித்தார்.

## சென்னை நகராட்சி மன்ற மாணவர்க்கு இலவச பாடசாலை உபகரணங்கள்

### அன்பளிப்பு வைபவத்துக்கு அண்ணு தலைமை தாங்கினர்

சென்னை, ஆக. 5 சென்னைநகராட்சி மன்றப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு சென்னை நகராட்சி மன்றம் நேற்றுஇலவசமாக சிலேட்டு பென்சில், புத்தகங்கள் ஆகியவற்றை அளித்தது.

சென்னை நகராட்சி மன்றப் பள்ளிக்கூடங்களில் 1-ம் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை 1 லட்சத்து 44 ஆயிரத்து 879 மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களுக்கே இலவச சிலேட்டு, புத்தகம், நோட்டு, பென்சில் ஆகியன அளிக்கப்பட்டுள்ளது

### அண்ணு ஒப்படைத்தார்

இந்த இலவச விநியோகத்தால்சென்னை நகராட்சிமன்றத்துக்கு ஏற்பட்டுள்ள செலவு ரூ 5லட்சத்து64 ஆயிரத்து 925 ஆகும்.

நேற்று நேரு மைதானத்தில் நடைபெற்ற விழாவில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் எத்தனை சிலேட்டு, புத்தகம் கொடுக்கப்படுமென்ற பட்டியலை அவ்வப்பள்ளிக்கூடத் தலைமையாசிரியர்களிடம் தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை ஒப்படைத்தார்.

விழாவில் பேசுகையில் சென்னை நகராட்சி மன்றத்தின் உதாரணத்தை ஏனைய நகராட்சி மன்றங்களும்பின் பற்றுமெனத்தாம் நம்புவதாக முதல் மந்திரி தெரிவித்தார்.

### சீருடை

நகராட்சிமன்றப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடைகொடுக்க மன்றம் ரூ. 6 லட்சம் ஒதுக்கியுள்ளது. விரைவில் சீருடையும் வழங்கப்படும்,

இலவசமாக மதிய உணவு சிலேட்டு, புத்தகம், சீருடை ஆகியவற்றைக் கொடுப்பதில் இந்தியாவிலேயே சென்னைதான் முதன்மை [illegible] குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## "புகையிலை கெடுதி தரும்"

உடுப்பிட்டி, சனி

'நாடு இன்று பெரும் உணவுப்பற்றுக்குறையில் சிக்கியுள்ளது. உப- உணவுப்பயிர் செய்கையைத் தீவிரப்படுத்துவதின் மூலமே நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலையைச் சமாளிக்கலாம். நாம் புகையிலையை உற்பதித் செய்வதில் காட்டும் அக்கறையை உருளைக்கிழங்கு பப்பாய் வெண்காயம் முதலிய உபஉணவுப்பயிர்ச்செய்கைகளில் காட்டுவோமானால் உணவுத்துறையில் நாட்டிற்குத் தொண்டு செய்தவர்களாவோம். விவசாயத்தில் ஈடுபடும் அனைவருக்கும் அரசாங்கம் பூரண ஆதரவு தரத்தயாராக இருக்கின்றது. புகையிலையினால நாம் கெடுதலையே அடைகிறோம். இதனால் வியாபாரிகள் பயனடையும்பொழுது பாவனையாளர்கள் துன்பமடைய நேரிடும்'' என உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி வடக்கு வதிரி உபதபாற் கந்தோர் புதிய தொலைபேசித் தொடர்பு சேவையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார். கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற இவ்வாரம்ப விழாவிற்கு வட பெரும்பாக தபாற்தந்திப்பகுதி அத்தியட்சகர் திரு. தா. தர்மலிங்கம் தலைமைவகித்தார்.

கரவெட்டி தபாற்கந்தோர் அதிபர் திரு. வி. ஏரம்பமூர்த்தி, பண்டிதர் திரு. த கிருஷ்ணபிள்ளை மற்றும் தலைமையாசிரியர் திரு. ஜே. கே. செல்வத்துரை, திரு .க கைலாசபிள்ளை டாக்டர் திரு. சி. கனகரத்தினம் உட்பட பலரும் பேசினர்' வதிரி உபதபாற்கந்தோர் அதிபர் திரு. கே. ஆறுமுகம் நன்றியுரை கூறினர்.

## பூநகரி செய்திக் கடிதம்

நமது நிருபர்

— ந. சூரியகுமாரன் —

பூநகரி, கரியாலை, நாகபடுவான் குடியேற்றத்திட்டக் காணிக்கு பூநகரிப் பகுதியிலிருந்து 227 பேர் விண்ணப்பித்திருந்தனர். இதில் படித்த வாலிபர்கள் 37 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். மொத்தமாக நாற்பத்தேழு [47] பேருக்கு மட்டும் காணி கொடுபட்டது. கரியாலை, நாகபடுவான் குடியேற்றத் திட்டத்தில் காணி வழங்கப்பட்டு எஞ்சியுள்ள காணிகளை தமக்கு வழங்கும்படி மிகுதிப் பேரில் சிலர் யாழ் அரசாங்க அதிபருக்குப் புகார் செய்துள்ளனர்.

### பஸ் சேவை

பூநகரி - சங்குப்பிட்டிக்கு இடையில் நடைபெற்று வரும் இ. போ. ச பஸ் சேவை மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றது. கிளிநொச்சிக்கு நடைபெற்று வரும் சேவையும் சீர்கேடாக இருக்கின்றது. இதனால் சில சமயங்களில் தபால் சேவையும் பாதிக்கப்படுகின்றது இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி தொகுதி எம். பி திரு. கா. பொ. இரத்தினத்திற்கும் இ. போ ச. முகாமையாளருக்கும் பொதுமக்கள் அறிவித்துள்ளனர்.

### பழுதடைந்த பாதை

பூநகரி - கேரதீவுக் கடலில் நடைபெற்று வரும் இயந்திரப் பாதை இப்பொழுது ஒரு மாத காலமாக பழுதடைந்த நிலையில் கிடக்கின்றது. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் இருக்கின்றன. இதனைத் திருத்தியமைத்து மக்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்யுமபடி பூநகரி ப. நோ. கூ. சங்கச் சமாசம் பகிரங்க வேலைப்பகுதிக்கு அறிவித்திருந்தும் இதுவரை நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

### ஆஸ்பத்திரி

பூநகரி அரசினர் வைத்தியசாலை நாலு பக்கமும் திறந்து வேலியின்றிக் காணப்படுகின்றது. இதனால் கால்நடைகள் சென்று அசுத்தப்படுத்துகின்றன. வைத்தியசாலையினுள் திரியும் நாய்கள் தண்ணீர். சாப்பாட்டு வகைகளை அசுத்தப்படுத்துகின்றன. வைத்தியசாலையின் நாலா பக்கமும் அமைந்திருக்கும் 'கான்'கள் உடைந்து இருப்பதால் அசுத்த நீர் வெளியில் செல்ல ஏதுவாகின்றது நோயாளருக்கு நல்ல காற்று வசதி இல்லை. இரவில் நல்ல வெளிச்சம் இல்லை. இவை போன்ற காரணததால் நோயாளர் பாதிக்கப்படுகின்றனர்.

## செய்தித் திரட்டு

### ஆசிரியர் தோற்றனர்

புன்னாலைக்கட்டுவன், சனி

உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் எச். எஸ். சி. மாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மாணவர் கோஷ்டி 5—2 கோல்களால் வெற்றியீட்டியது திரு. எஸ். பரமேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார்.

ஃ ஃ ஃ

### கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன், சனி

சரித்திரம், குடியியல், புவியியல் ஆகிய பாடங்களை க. பொ. த. வகுப்புகளில் போதிப்பதுபற்றி செப்டம்பர் மாதம் 31-ம் திகதி தொடக்கம் அக்டோபர் மாதம் 2-ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது. பங்குபற்றும் சகல ஆசிரியருக்கும் இலவச உணவு, விடுதிவசதிகள் ஒழுங்கு செய்யப்படுமெனத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

### மாற்று மருந்து

சுன்னாகம், சனி

''சமயங்கள் யாவும் அன்பையே பேசுகின்றன. மனிதனை வாட்டும் ஆசை நோய்க்கு அன்பே மாற்று மருந்தாகும். இன்றைய இந்த விஞ்ஞான யுகத்திலே சமய உணர்வு குன்றி வருவது நாளைய சந்ததிக்கு மாறாத தீங்கை விளைவிக்கும்'' என சுன்னாகம் சிவன் கோவிலில் நடந்த அம்மன் உற்சவ தினத்தன்று பேசிய திருமதி வேதவல்லி கந்தையா குறிப்பிட்டார்.





லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்தர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது: இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

மில்லர்ஸ்

லிமிட்டெட்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை ஆராய்ந்து போர்ட் Ford வாங்குங்கள்



46 குதிரைச் சக்தி கொண்ட புதிய போர்ட 3000 என்னும் இழுவை இயந்திரம், இலங்கையின் பயிர்ச் செய்கைக்கும் நிலவளத்துக்கும் மிக உகந்தது.

உண்மை! எந்த நிலத்திலும் பாரமானதும் பாரங்குறைந்ததுமான கருவிகளுக்கு போர்ட் ஹைட்ரோலிக் இணைப்புகள் அதிகபட்ச இழுவைச் சக்தி தருகின்றன சாரதி, போர்டின் இலகுவான கட்டுப்பாட்டு விசைகொண்டு, கருவியின் நிறைக்கும் மண்ணின் தன்மைக்கும் தக்கபடி இழுவை வேகத்தைச் சரி செய்து கொள்ளலாம்

உண்மை! சாரதிகள் களைப்படையாமல் நெடு நேரம் வேலை செய்யலாம்

உண்மை! போர்டுக்கு பிரத்தியேகமான வெளிவீச்சு பாட்டரி, கிரமமான இயந்திர பராமரிப்பை இலகுவாக்குகிறது

உண்மை! எப்போதும் இலகுவிற் கிடைக்கும் அசல் போர்ட் உபரி பாகங்கள், உங்கள் போர்ட் இழுவை இயந்திரம், நீண்டகாலத்துக்கு மேலும் சிக்கனமான சேவையை உங்களுக்கு வழங்குவதை உறுதி செய்கிறது

## நீங்களே நேரில் நிச்சயித்துக்கொள்ளுங்கள்

மாதிரிக் காட்சிக்கு எம்மிடம் கேளுங்கள்!

சத்தியவாதி ஸ்டோர்ஸ் அண்ட் மோட்டார் டிரான்ஸ்போட்டர்ஸ் லிமிட்.
21, தம்புலல வீதி, குருநாகல்.

JWT-F 13 A

24


## கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு ஆவணி மாதம் 15-ந் திகதி காலை 9-30 மணி வரைக்கும் தெல்லிப்பளை கிராமசபை அக்கிராசனரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 5/- பத்திரப் பணமாகவும் கீழ்க் குறிப்பிடும் விபரப்படி கேள்விப் பிணைப்பணமாகவும் செலுத்தியதன்பேரில் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களிலேயே கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 14-8-67-ந் திகதி நண்பகல் 12-மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கள் யாவும் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

### வேலைகளின் விபரம்

1. மடத்தடி ரோட்டு - கேள்விப்பிணை ரூபா 75/-.
2. சிக்கட்டியான்ரோட்டு - கேள்விப்பிணை ரூபா 50/-.
3. கீரிமலை நீரூற்று - கேள்விப்பிணை ரூபா 25/-.

த. செல்வரத்தினம்,
அக்கிராசனர்,
கிராமசபை, தெல்லிப்பளை,
54 2-8-67.

## கேள்வி விளம்பரம்

புதுக்குடியிருப்பு கி. ச. தலைவரால் சந்தைக் கட்டிட வேலைக்கு ரூபா 5000-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்து 18-8-67 காலை 10 மணி வரை பதிவு செய்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் எடுப்பவர்கள் கேள்விக்காசு ரூபா 50/-ம் பத்திரக்காசு ரூபா 10/-ம் கட்டி 17-8-67-க்கு முன் பெறவேண்டும். பத்திரக்காசு திருப்பிக் கொடுபடமாட்டாது. விபரங்களை இச்சபைக்கந்தோரிலும் வவுனியா உள்ளூராட்சி உதவிஆணையாளரின் கந்தோரிலும் அறியலாம்.

சி. சிதம்பரப்பிள்ளை,
கி. ச. தலைவர்,
புதுக்குடியிருப்பு.
1-8-67 53

## பலாலி-மகாரகம விளையாட்டுப் போட்டி முடிவுகள்

காங்கேசன்துறை, சனி

வருடாவருடம் பலாலி பயிற்சிக்கல்லூரிக்கும் மகாரகமை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டி இவ் வருடம் பலாலி ஆசிரியர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டி முடிவுகள் வருமாறு:-

4X100மீட்டர் அஞ்சல் ஓட்டம்(ஆண்கள்): பலாலி, மகாரகமை, மகாரகமை.

4X400மீட்டர் அஞ்சல்ஓட்டம்(பெண்கள்)' மகாரகமை, மகாரகமை பலாலி.

4X400மீட்டர் அஞ்சல்ஓட்டம் (ஆண்கள்); பலாலி, மகாறகமை, மகாரமை.

1500 மீட்டர் ஓட்டம் [ஆண்கள்]: மூன்று இடங்களிலும் மகாரகமை, கயிறு இழுத்தல் போட்டி:- மகாரகமை.

## பாதுகாப்பு சபை வெற்றியீட்டியது

அனுராதபுரம் சனி

அனுராதபுர பாதுகாப்புச்சபை விளையாட்டுக் கழகத்திற்கும் கவாலியர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற இறுதிக் கிரிக்கெட் போட்டியில் அனுராதபுர பாதுகாப்புச் சபை விளையாட்டுக் கழகம் மகத்தான வெற்றியீட்டியது. தனசிறி சில்வா 13 ஓட்டங்களுக்கு 8 விக்கட்டுகளைக் கைப்பற்றியதுடன் 32 ஓட்டங்களும் பெற்ருர்.

## மீண்டும் நியமனம்

புனகரி, சனி

பூநகரி - கேரதீவு ஆயத்துறை மனேஜராக திரு. எஸ். சபாரத்தினத்தை பூநகரி ப. நோ. கூ. சங்க சமாஜம் மீண்டும் நியமித்துள்ளது.

## வரிவிளமபரம

### விற்பனைக்கு

**பாக்குத்தூள்**

பீடாப்பாக்குத் தயாரிப்பவர்களுக்கு தேவையானதுப் பரவான தூள்பாக்கு மொத்தமாகவும்சில்லறையாகவும் விற்பனைக்கு இருக்கிறது. அசோகன்ஸ் 39/4, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2463

**ருன்சிஸ்டர், ரேடியோக்கள்**

மிகவும் உயர்ந்தரக ருன்சிஸ்டர் ரேடியோக்கள், ரேப்றெக்கோடர்கள் எம்மிடமுண்டு. மோஹன்'ஸ் றேடியோ திருத்துபவர்கள் சங்கானை. 2470

**வீடு**

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக் கருகாமையில் மூன்று பரப்பில் கல்வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ரகுபதி, 108, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 2469

### வாடகைக்கு

**வீடு**

சகல வசதிகளுடன் 69-ம் நம். பண்ணை வீதியில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரம்:- இல. 215, K. K. S. ரோட், யாழ்ப்பாணம், 2468

## 2 மாத கடுழியம்

உடுப்பிட்டி, சனி

வல்லிபுரம் வேலுப்பிள்ளை என்பவர் நமசிவாயம் என்பவருக்குக் காயம் விளைவித்ததாகப் பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா எதிரிக்கு 2 மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

## சேலைக்கடை விற்பனை

பெரிய கடையிலுள்ள சேலைக்கடை வியாபாரம் சகல தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. மலிவு ரூ. 15000/- விளம்பர இல. 50, ஈழநாடு, மே/பா த. பெ. எண். 49, யாழ்பபாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 50


இலங்கையில் தமிழில் வெளியாகும் ஒரேயொரு விவசாய மும்மாசிகை

# கமத்தொழில் விளக்கம்

விவசாயப்பகுதியினரால் வெளியிடப்படுவது

## மாணவர்களுக்கெனவும்

## விசேடபகுதியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வருட சந்தா: ரூபா ஒன்று மாத்திரமே

ஒவ்வொரு இதழிலும் 42,000 பிரதிகள் விநியோகமாகின்றன

தபால் ஓடரில் பணம் அனுப்புங்கள்:

கமத்தொழில் உத்தியோகத்தர் விசாலிப்பு உதவிகள்
த. பெ. எண் 636,
19, சோண்டேஸ் பிளேஸ்,
கொழும்பு—12

39


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் நடந்த உதைபந்தாட்ட போட்டிகள்

திருக்கோணமலை, வியா. நீண்டநாட்களுக்குப் பின்னர் கொழும்பு சாகிராப் பாடசாலை மாணவர்களுக்கும், திருக்கோணமலை சென். ஜோசெப் பாடசாலை மாணவர்களுக்குமிடையே திருக்கோணமலை சுற்றுமதில் விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி விளையாட்டு ரசிகர்களுக்கு ஒரு நல்விருந்தாயமைந்தது. திருகோணமலைச் சரித்திரத்தில் அதுவும் உதைபந்தாட்டத்தில் அகில இலங்கை வீரர்களைக் கொண்ட நகரில் இத்தகையோர் ஆட்டம் சிறந்த முறையில் விறுவிறுப்பு நிறைந்ததாகவிருந்தது. இது இரண்டாவது முறையெனின் மிகையாகாது. இப்போட்டியில் இருகோணமலை சென். ஜோசப் கல்லூரி மாணவர்கள் நான்கு கோல்களைப் போட்டு வெற்றிவாகை சூடினர்.

திருகோணமலை அர்ச். சூசையப்பர் கல்லூரியின் நூறுவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் திருகோணமலை மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது ஆட்டம் திருகோணமலைச் சுற்றுமதில் விளையாட்டரங்கில் மட்டக்களப்பு பறங்கியர் உதைபந்தாட்டக் குழுவுக்கும், திருகோணமலை சென். அந்தனிஸ் விளையாட்டுக் குழுவுக்கும் இடையே மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதிவரை இருகுழுவினரும் சமனாக விளையாடவே மத்தியஸ்தர் மேலதிக பத்து நிடங்கள் அளித்தார். இதனை மட்டுநகர் பறங்கியர் குழுவினர் பயன்படுத்தி ஒரு கோல் போட்டு வெற்றிபெற்றனர்.

# இருமல்மருந்தெனநினைத்து நஞ்சைக் குடித்தாரம்

## இளம பெண் மரணம: தற்கொலை எனத் தீர்ப்பு

உடுப்பிட்டி, சனி

தந்தை ஏசியதால் மனமுடைந்த இளம் பெண் தற்கொலை செய்து உயிரை மாய்த்தார். அல்வாய் தெற்கு, மடத்தடி என்னுமிடத்தைச் சேர்ந்த கிருஷ்ணர் என்பவரின் மகளான நவமலர் [வயது 20] என்னும் இளம் பெண்ணே கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டவராவர்.

காலஞ்சென்ற பெண்ணின் தமையனான குணரத்தினம் என்பவர் லண்டனில் இருப்பதாகவும், அவர் 1000 ரூபாவுக்கான செக் ஒன்று அனுப்பிவைத்ததாகவும், அதில் நவமலர் பிழையாகக் குறிப்புகள் எழுதியமையினால் தந்தை கண்டித்ததாகவும், இதனால் மனமுடைந்து காணப்பட்டார். நவமலர் கிருநாசினியை அருந்தியதாகவும், உடனடியாக அவரை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவரைக் காபபாற்ற டாக்டர்கள் எடுத்த முயற்சிகள் பயனளிக்காமற் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காலஞ்சென்றவர் தனது வாக்குமூலத்தில் தனக்கு வைத்த இருமல் மருந்து என நினைத்து தவறுதலாகக் கிருமிநாசினியைக் குடித்துவிட்டதாகக் கூறினாராம். சாட்சியங்களில் முரண்பாடு காணப்பட்டதினால் மந்திகையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

இறந்தவரின் தந்தையான கிருஷ்ணர், தாய் தங்கமுத்து டாக்டர் உட்பட வேறு சிலரும் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை நடாத்திய உடுப்பிட்டிப்பகுதி மரண விசாரணை அதிகாரி புரக்டர் திரு. தாமோதரம் பிள்ளை தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## காரியாதிகாரி முயற்சி

வவனியா, வியா.

வவனியாக் காரியாதிகாரி பிரிவிலுள்ள பொதுமக்களுக்குத் தேவையான உழவு இயந்திரம். உபஉறுப்புகள், தண்ணீர் பம்பு ஆகியவற்றைக் கடன் வசதியில் பெற்றுக்கொடுக்க வவனியா தெற்கு தமிழ் பிரிவுக்காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம் ஒழுங்குகள்செய்துள்ளார்.

## 9-ந் திகதிவரை றிமாண்ட்

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரியைச் சேர்ந்த தாவளையத்தாளை என்னுமிடத்தில் மாதி என்னும் வயோதிபமாதைக் கொலை செய்தார்களென்று சந்தேகத்தின்பேரில் சாவகச்சேரிப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட எஸ். கந்தசாமி, கார்த்திகேசு - தெய்வானை, வே.முருகன் ஆகிய மூவரும் மீண்டும் இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபர்கள் மூவரையும் இம்மாதம் 9-ந் திகதி வரை தொடர்ந்து றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## கருணநிதி,...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி கட்சியின் கமிட்டிக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுமென அறியப்படுகின்றது.

25-ம் திகதி மாலை நடைபெறவிருக்கும் விழாவில் நடைபெறும் கவியரங்கில் முதலாம், இரண்டாம்இடங்களைப்பெறும் கவிஞர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் அன்பளிக்கப்படும்,

27-ம் திகதி மாலை வல்வெட்டித்துறைக் கடலிலிருந்து பருத்தித்துறைக் கடல்வரை வள்ளஊர்வலம் ஒன்றும் மற்றும் சைக்கிள், மாட்டுவண்டி, ட்ராக்டர்கள் ஊர்வலங்களும் நடைபெற வாலிப முன்னணியினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். [ந. நி:]

## காணமற்போன பொருள்கள்

யாழ்ப்பாணம், சனி

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் காரிலிருந்து சில தினங்களின் முன் காணமற்போன பொருள்கள் அவரிடம் ஒருவரால் அவரது இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய செய்திவெளியிட்டு தமது பொருள்களை தம்மிடம் சேர்ப்பிப்பதற்கு உதவியதற்காக 'ஈழநாட்டுக்கு' தமது நன்றியை திரு. தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# எம். ஜி. ஆரின் . . . .

[2-ம்பக்கத் தொடர்ச்சி]

எங்கே என்பதுபற்றியோ நான் விசாரிக்கவில்லை. ராதா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர்தான் எனது வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதா என்பது நினைவில்லை. சூட்டுச் சம்பவத்தின் பின் நான் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி "பெற்றால்தான் பிள்ளையா" என்ற படத்தின் நூறுவது தின விழாவில் கலந்து கொள்ளும்வரை வாசுவை நான் சந்திக்கவில்லை. டைரக்டர் பஞ்சு கடுமையாக உழைத்து வாசுவுக்கு உதவியிருக்கிறார். இதற்காக பஞ்சுவுக்கு வாசு கடமைப்பட்டிருக்கவேண்டுமா என்பது பற்றி எனக்குத் தெரியாது

வழ: எம். ஜி. ஆருக்குச் சாதகமாக வாசு சாட்சியமளிக்க வேண்டுமென பஞ்சுமூலம் ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டதா?

எம். ஜி. ஆர்.: எனக்குத் தெரியாது.

ராஜ்யப் பப்ளிக்பிராசிகியூட்டராக இருந்த திரு திரு. வி. பி. ராமனை எனக்குத் தெரியும். கடந்த ஐந்து வருடங்களாக அவர் எனது வழக்கறிஞராக இருந்துவருகிறார்.

எனது 'ரிவால்வர்' பொலிசாரிடம் கையளிக்கப்படுவதற்குமுன் சூட்டுச் சம்பவத்தில் உபயோகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 'ரிவால்வர்' பொலிசாரிடம் கையளிக்கப்பட்டதா என்பதுபற்றிஎனக்குத் தெரியாது. ரிவால்வரைபொலிஸ் நிலயத்தில் ஒப்படைப்பதற்குமுன்னர் வாசுவை வழக்கறிஞர் ராமன் வீட்டுக்கு சக்ரபாணி கூட்டிச் சென்றது எனக்குத் தெரியும்.

வழ: சூட்டுச்சம்பவம் சம்பந்தமான உண்மைகளை மறைப்பதற்கு வாசுவுடன் சில ஏற்பாடுகளைச் சக்கரபாணி செய்திருக்கிறார் என்று நான் கூறுகிறேன்.

எம். ஜி. ஆர்.: இல்லை: இல்லை.

வழ: உண்மையை மறைத்து பொய்ச் சாட்சியங்கள் இந்த வழக்கில் தயாரிக்கப்பட்டிருப்பதாக நான் சொல்கிறேன்.

எம். ஜி. ஆர்.: இல்லை; ஒருபோதும் இல்லை.

### 'அன்பேவா' படத்துக்கு ஒன்றரை லட்சம்

எம். ஜி. ஆர். மேலும் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:—

'அன்பேவா' படத்தில் நடித்ததற்கு நான் ஒன்றரை லட்சம் ரூபாய் பெற்றேன். 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் நடித்ததற்கு இரண்டு லட்சத்து முப்பத்தையாயிரம் ரூபாய் வாங்கினேன். சென்ற மூன்று வருடங்களில் சுமார் பதினாறு படங்களில் நடித்திருக்கிறேன்: சத்தியாமூவீஸ் நிறுவனம் எனது காரியதரிசி வீரப்பனுடையது. சத்தியாமூவிஸுக்கு கிடைக்கும் லாபம் எனக்கு வருவதாகக் கூறப்படுவது சரியல்ல.

எனது (எம். ஜி. ஆரின்) சொத்துக்களின் மொத்தப் பெறுமதி சுமார் இருபத்தைந்து லட்சம் ரூபாய். அண்ணன் சக்கரபாணிக்கும் எனக்கும் பிரிவினை செய்யப்படாத சொத்துக்களிருக்கின்றன.

### 'கதாநாயகனாகவே நடிப்பேன்'

வழக்கறிஞரின் மற்றொரு கேள்விக்கு எம். ஜீ. ஆர், பதிலளிக்கையில் கூறியதாவது:—

படங்களில் கதாநாயகன் பாத்திரத்திலேயே நடிக்க நான் நினைந்திருக்கிறேன், இதை நானாக மாற்றிக் கொள்ளாதவரை வேறு யாரும் மாற்ற முடியாது.

படம் தயாரிக்க விரும்பும் கோயம்புத்தூர்காரர் பற்றி வாசு பேசியபொழுது 'கதாநாயகன், பற்றிய பேச்சு எழவில்லை. ராதாவும் அந்தப்படத்தில் நடிப்பாரென நான் நினைத்தேன். பொது மக்கள் மத்தியில் எனக்கிருக்கும் செல்வாக்குக் காரணமாக தயாரிப்பாளர்கள் முதலில் என்னிடம் வந்து எனது சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு அதன்பின் கதையைப்பற்றி ஆலோசிப்பார்கள்.

சூட்டுச் சம்பவம்பற்றி ராதா என்மீது குற்றம் காண்பார் என எனக்கு எவ்வித அச்சமுமில்லை. ஏனெனில் நான் நிரபராதி. ராதா தி. மு. கழகக் கொள்கைகளுக்கு மாறானவர் என நான் கருதுகிறேன். ஒரு படத்தில் "நம்பிக்கையான நட்சத்திரம்', என்ற வசனத்தை "நம்பிக்கையான உதயசூரியன்" என நான் மாற்றியபொழுது அதை ராதா ஆட்சேபித்தார். திரைப்படங்கள் மூலம் எனது கட்சிக் கொள்கைகளையும் நோக்கங்களையும் பரப்பவேண்டுமென்பது எனதுநோக்கம் என்றும் எம். ஜி. ஆர். சொன்னார்,

வழக்குவிசாரணையில் தாம் அளித்த சாட்சியங்கள் எதிர்மாறான கருத்தைத் தெரிவிக்கக்கூடியதாக சில பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதாக எம். ஜி. ஆர். நீதியரசரிடம் புகார் செய்தார்.

# பிரயாணிகள் தப்பினர்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவிலிருந்து வவுனியாவை நோக்கிச்சென்று கொண்டிருந்த பஸ்வண்டியும் குமுளமுனையிலிருந்து முல்லைத்தீவை நோக்கிவந்த பஸ் வண்டியும் முல்லைத்தீவு மாங்குளம் றோட்டில் உள்ள பணிவயல் முடக்கு என்னுமிடத்தில் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. எனினும் பிரயாணிகள் தெய்வாதீனமாக தப்பிக் கொண்டனர். முல்லைத்தீவுப்பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

# தட்டுப்பாடு

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவில் புட்டிப் பால், நெஸ்பிறே, மற்றும் குழந்தைகளுக்கான பால் உணவுகள் மிகவும் தட்டுப்பாடாக இருப்பதால் தாய்மார் கவலை தெரிவிக்கின்றனர். அத்துடன் தேநீர்க் கடைக்காரரும் புட்டிப்பால் இன்றிக் கவலைப்படுகின்றனர். ஒன்றரை ரூபா கொடுத்து ஒருபுட்டி பால்மின் வாங்கியதாக ஒரு தேநீர்க் கடைக்காரர் கூறினார்.

சென்னை, ஆக. 5

தீ விபத்துக்களில் வீடிழந்தோருக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காகத் தமிழக முதல் மந்திரி ஆரம்பித்த நிதிகளில் ஆகஸ்ட் 3-ம் திகதிவரை 15 லட்சத்து 72 ஆயிரத்து 344 ரூபாய்வரை சேர்ந்துள்ளது.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00, 9-45
THE CARPET BAGGERES
(ADULTS ONLY)

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
அன்னை இல்லம்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
காஞ்சித்தலைவன்

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m
9-45 p. m.
Fred Mac Murroy
Keenam wynn
in
Absent Minded Professor

இரண்டாவது வாரம!

ஜெஸ்லி [கொட்டாஞ்சேனை]
காமினி [மருதானை]
ராஜ் [நீர்கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org